பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

பக்கங்கள் 08

# வலம்புரி
# VALAMPURI

விலை ரூபா 5-00

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 ஆவணி 12 திங்கட்கிழமை (28-08-2000) தொ. பேசி;- 3378 ஒலி: 251

## புலிகள் பயங்கரவாதிகள் அல்ல அவர்கள்விடுதலைப்போராளிகளே!

### கனேடிய தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் பேசும் மக்களின் அடிப்படை உரிமைகளுக்காக போராடும் போராளிகளேயொழிய அவரகள் பயங்கரவாதிகள் அல்ல என கனேடிய தூதுவர் றூத் அச்சிபோல்ட் தெரிவித்துள்ளார். கொழும்பு ரேணுகா ஹோட்டலில் தேசிய சமாதான பேரவை யின் இனப்புரிந்துணர்வுக்கான பத்திரிகையாளர் மகாநாட்டில் பேசும் போதே அவர் மேற்க்கண்டவாறுதெரிவித்துள்ளார். (8ஆம்பக்கம்பார்க்க)

## மிதிவெடியில் காலிழப்பு

(வவுனியா)

மாங்குளம் ஒலுமடுப் பகுதியில் இளைஞர் ஒருவர் மிதி வெடியில் சிக்கி இடது காலை இழந்துள்ளதாகத்தெரிவிக்கப் படுகிறது.

க. ஜெயக்குமார்(வயது21) என்பவரே காலை இழந்த நிலையில் மல்லாவி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ந- 7)

## இன்று நல்லூர் தேர்



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர் முருகனின் தேர்த் திருவிழா இன்று நடைபெறுகிறது

அதிகாலையில் வசந்த மண்டப பூசை, யாக பூசை, தம்ப பூசையுடன் ஆரம்பமாகி காலை 7 மணிக்கு ஆறுமுகப்பெருமான் தேரில் ஆரோகணிப்பார்.

மீண்டும் 8-00 மணிக்கு தேர் இருப்பை வந்தடையும். தேர் உற்சவ நேரடி வர்ணனை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் ஸ்தாபனத்தால் மேற்கொள்ளப்படும்.

## ★ இன்று முதல் செப்: 4ம் திகதி வரை

# 22மாவட்டச்செயலகங்களில்

# நியமனப்பத்திரங்கள்தாக்கல்

## பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது

(கொழும்பு விசேட நிருபர்)

ஒக்டோபர் மாதம் 10ம்திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றப் பொதுத் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் இன்று முதல் அடுத்த மாதம் 4ம்திகதி வரை நாடெங்கிலும் உள்ள 22மாவட்டச்செயலகங்களில் தாக்கல் செய்யப்படவுள்ளது.

நியமனப் பத்திரங்கள் காலை 9 மணி முதல் பிற்பகல் 4. 45 மணிவரை மாவட்டச்செயலகங்களில் வைத்து உதவித் தேர்தல் ஆணையாளர்களினால் ஏற்றுக் கொள்ளப்படும்.

நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்படும் மாவட்டச் செயலகங்களுக்கு பலத்தபாதுகாப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பொதுத் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் நாடெங்கிலும் உள்ள 22மாவட்டச்செயலங்களில் வைத்து இன்றுகாலை 9மணிமுதல ஏற்றுக்கொள்ளப்படவுளளன

இந்த வேட்புமனுக்களை ... அறிவித்துள்ளது.

நியமனப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் மாவட்ட செயலகங்களுககுள் அதிகாரம் பெற்றவர்கள மாத்திரமே அனுமதிக்கப்படுவதை அரசியல் கட்சிகளின் செயலாளர்

நுவரேலியா மொனராகலைமாவட்டங்களில் தேர்தலில் போட்டியிடுவதற்காக சுயேற்சை குழுக்கள் (8ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணச் செயலகத்திலும் வேட்புமனுத் தாக்கல் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பொதுத்தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் இன்று யாழ்மாவட்ட செயலகத்தில் தேர்தல் அதிகாரியினால் ஏற்றுக் கொளளப்படும் என யாழ் அரச அதிபர் க.சண்முகநாதன் அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் யாழ்மாவட்ட செயலகத்தில் இன்று காலை 9 மணிக்கு மனுத்தாக்கல் ஆரம்பமாகி அடுத்த மாதம் 4ந்திகதி நண்பகல் 12மணிக்குள் வேட்புமனுக்கள் ஏற்றுகொள்ளப்படுவது முடிவடைந்துவிடுமென தெரிவித்துள்ளார்

வேட்புமனு தாக்கல் செய்யப்படுவதை அடுத்து யாழ். செயலகத்தில் பாதுகாபபு பலப்படுத்தப்பட்டிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது(வ)

## ஹெலி தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

நேற்றுக் காலை விமானப் படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர்கள் கைதடி, நாவற்குழி, செம்மணி ஆகிய பகுதிகளை நோக்கிச் சரமாரியான தாக்குதலை மேற்கொண்டது.

எனினும் இதன் சேதவிபரங்கள் குறித்து எதுவும் தெரியவரவில்லை.

(ந)

# வேட்பாளர்களைத் தெரிவில்

இந்த வேட்புமனுக்களை அரசியல் கட்சிகள் அடுத்த மாதம் 4ஆம்திகதி நண்பகல் 12மணிக்குள் தாக்கல்செய்ய வேண்டும் எனவும் அதற்கான ஏற்பாடுகள் யாவும் ஒவ்வொரு மாவட்ட செயலங்களினால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணையாளர் அலுவலகம் ... யல் கட்சிகளின் செயலாளர் சுயேற்சைகுழுக்களின் தலைவர்களுக்கு உறுதிப் ப'டுத்திக்கொள்ள வேண்டும்.

இம்முறை நடைபெற இருக்கும் தேர்தலில் தேர்தல் ஆணையாளரால் அங்கிகரிக்கப்பட்டதாக 45 அரசியல் கட்சிகள் தேர்தல்களத்தில் குதிக்கவுள்ளன.

## அடுத்த மாதம் 19ஆம் திகதி முதல் வாக்காளர் அட்டைகள் விநியோகம்

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான உத்தியோக பூர்வ வாக்காளர் அட்டைகளை வாக்காளர்களுக்கு விநியோகிக்கும் பணி ஆரம்பிக்கப்படவுள்ளதாக தேர்தல் ஆணையாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

இவ்வாக்காளர் அட்டை செப்டம்பர் மாதம் 19 ஆம் திகதி முதல் ஒக்டோபர் மாதம் 2ஆம் திகதிக்கு முன்னர் வழங்குவதற்கான நடவடிக்கைகளை தபால் திணைக்களம் மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## வடமராட்சியில் உணவுக் களஞ்சியம் அமைக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் வடமராட்சி பகுதியில் உணவுக் களஞ்சியம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இக்களஞ்சியக் கட்டடம் புலோலியில் அரசுக்கு சொந்தமான காணி ஒன்றிலேயே அமைக்கப்படவுள்ளதாகவும் தற்போது இக்காணியில் இடம்பெயர்ந்து வாழும் மக்கள்இருப்பதால் அவர்களுக்கு பிறிதொரு இடத்தில்

(8 ஆம்பக்கம் பார்க்க )

# வேட்பாளர்களைத் தெரிவதில் புளொட் அமைப்பு மும்முரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் புளொட் அமைப்பின் சார்பில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களை தெரிவு செய்வதில் தீவிர கவனம் செலுத்தி வருவதாக புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் இன்று தொடக்கம் யாழ்.செயலகத்தில் தாக்கல் செய்யப்பட இருப்பதை அடுத்து புளொட் அமைப்பின் ஆதரவாளர்கள் மற்றும் பல்வேறு அமைப்புகளை சேர்ந்த பிரமுகர்களை அழைத்து வேட்பாளர்களை தெரிவு செய்வது தொடர்பாக சித்தார்த்தன் கலந்துரையாடி வருகிறார்.

இத்தேர்தலில் புளொட் அமைப்பு ஈரோஸ் உடன் இணைந்து போட்டியிடவுள்ளது என்றும் யாழ். மாவட்டத்தில் போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் பட்டியல் தெரிவு இன்னும் இரு தினங்களில் இறுதி வடிவம் பெற்றுவிடுமெனவும் புளொட் அமைப்பின் தலைவர் தெரிவித்தார்.

இதேவேளை யாழ். மாவட்டத்தின் புளொட் அமைப்பின் முதன்மை வேட்பாளராக தர்மலிங்கம் சித்

(8ஆம் பக்கம் பார்க்க)

## இறீம் ஹவுசிற்குள் நுழைய முயற்சி தடுத்து நிறுத்திய பாதுகாப்பு ஊழியர் போத்தலினால் தாக்கப்பட்டார்

(அரியாலை)

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் இயங்கும் பிரபல கிறீம் ஹவுஸ் ஒன்றின் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் மனநோயளிபோல் நடித்த ஒருவரால் போத்தலினால் அடித்து தாக்கப்பட்டுள்ளார்.

தாக்குண்டவர் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம்பற்றி மேலும் தெரியவருவதாவது;

சம்பவதினம் மாலை அலங்கோலமான உடையுடன் மனநோயாளிபோல காணப்பட்ட ஒருவர் குறிப்பிடப்பட்ட கிறீம் ஹவுசினுள் நுளைய முயனற போது பாதுகாப்புக் கடமையிலிருந்த ஊழியர் அவரை தடுத்து நிறுத்தியபோதே மேற்படி தாக்குதல் சம்பவம் இடம் பெற்றது.

இதற்கிடையில் பிரஸ்தாப நபர் உண்மையில் மனநோயாளிதானா என்பதனை ஊர்ஜிதப்படுத்த முடியவில்லையென சம்பந்தப்பட்ட வட்டாரங்களிலிருந்து தெரிவிக்கப்படுகிறது. (க-106)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

புதிதாக ஆரம்பித்த ஐஸ் கிறீம்கம்பனிக்கு கிறீம் மேக்கர், மற்றும் சைக்கிள் வியாபாரிகள், தேவை. தொடர்பு முகவரி: ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம் கந்தசுவாமி கோவில் வடக்கு வீதி நீர்வேலி தெற்கு. [1666]

### விற்பனைக்கு

நாவலடிலேன் திருநெல்வேலி என்ற முகவரியில் அமைந்துள்ள 2 பரப்புக் காணியும் அதனுள் அமைந்த வீடும் விற்பனைக்குண்டு.
தொடர்புகளிற்கு ச.குணேந்திரன் 400, கோவில் வீதி நல்லூர் வடக்கு, [கி.752]

### தேரினில்...

வும், பிரபஞ்சப் பொருட்கள் யாவும். இதில் அடங்கியதாகவும், இந்திரியங்கள் தேவர்களாகவும், அஞ்ஞானத்தாற் பிடிக்கப்பட்ட சீவன் பிரம்மா ஆகவும், அவன் பெற்ற அறிவு வேதங்களாகவும், இறையருளால் ஞான ஒளி உதயமாக, மூக்குணங்களும் அதில் மறைந்து ஆன்மா சிவவசமாகின்றது இதனையே முப்புரங்கள் அழிந்து அரக்கர் இறையருள் பெற்றதாகவும், புராணங்கள் கூறுகின்றன;

திருமந்திரம் இதனைக் கீழ்க்கண்டவாறு அழகாக

அப்பணி செஞ்சடையாதி புராதனன்
முப்புரஞ் செற்றனனென்பர்கள் மூடர்கள்
முப்புரமாவது மும்மல காரியம்
அப்புரமெய்தமை யாரறிவாரே.

என எடுத்துக் கூறுகின்றது.

மேலும் இரத உற்சவத்தின் போது, இரதத்திலே இறைவனைத் தரிசிக்கும் போது, இறைவனுக்குள் பிரபஞ்சம் முழுவதும் மறைந்திருக்கின்றது. வெளியேள்ள மாயைகளை விட்டு, உட்பேரொளியை மனதிற் கொண்டு வழிபடுவோமாயின் நற்கதியடையலா மன்றோ.

மேலும் இந்த உடம்பும், ஒப்பற்றதொரு தேர், இதில் உயிராகிறது இதனை இயக்கிக்கொண்டிருக்கிறது; சடமாகிய இந்த உடலை இயக்கிக் கொண்டிருப்பது உயிர் என்பதைநாம் அறிவதில்லை. பூமியாகிய தேரில் இறைவன் எழுந்தருள் புரியும் பெருண்மையை உணர்வோமாயின் வாழ்வில் குறைவேயில்லை.

எனவே ஊரார் யாவரும் ஒன்று கூடி வடம் பிடித்து சேர் இழுத்து-தேர்த்திருவிழாவின் போது இறைவனை வழிபடுவது நம்மைப் பீடித்துள்ள மல பந்தங்கள் நீங்கப் பெற்று, இறைவன் பேரானந்தப் பெரும்பேறை யாவரும் பெறுதற் பொருட்டேயாகும் என்பதை நன்குணர்ந்து, இரத உற்சவத்தின் போது மனத்தூய்மையுடன் வழிபாடுகள் செய்துபேரானந்தப் பருவாழ்வு பெறுவோமாக;

நாளைக்கு நாதமணி கேட்கையிலே - முருகா யாழ். நகர் முருக பக்தி ஓங்கிடும் - அருள் நோக்கி ஈழ மண்ணை காக்க நீ குடிகொண்டாய் - நல்லூரில் நீ இருக்க பயமேன்! என பக்தர் கூட்டம் அலைமோதுதப்பா;

மனதை கவரும் சக்தி விநாயகருக்குண்டு
கண்ணை பறிக்கும் சக்தி விநாயகர் புடவையகத்துக்கு.

**இதோ!**

திருமண வைபவங்களுக்கு ஏற்ற
★ பலவர்ண கூறைச் சேலைகள்
★ பட்டு வேட்டிகள்
★ பாவாடைகள்
★ பிளவுஸ்
★ பஞ்சாபி உடைகள்
மற்றும் பலவிதமான இந்திய சாறி வகைகள்
சாறி பிளவுஸ் துணி வகைகள்
ஆண்களுக்குரிய சேட்டிங் சூட்டிங் வகைகளுக்கும்
விஜயம் செய்யுங்கள்

**விநாயகர் புடவை அகம்**
**VINAYAKAR PUDAVAI AKAM**
63 A, 62A 61 நவீனசந்தை (உட்புறம்
யாழ்ப்பாணம்
(கி-759)

ஐங்கரன் தம்பியே! சிவசங்கரன் மைந்தனே!
சிறந்த நல்வாழ்வு தந்து எமை ரட்சிப்பாய்
மங்காமல் எம் வாழ்வு மாட்சிமை பெற்றிடவே
ஆறுமுகமாகி தேரேறி வந்து புதுவாழ்வு படைத்திடுவாய்;

★ தரமான போட்டோஸ்ரத் பிரதிகள்
★ அடையாள அட்டை கவரிடுதல்
★ 59 வருட றைக்கிளீனர்ஸ்
இம் மூன்றும் இணைந்த சேவைகளை
ஒரே இடத்தில்
பெற்றுகொள்ள நாடுங்கள்

**சன்லைற் றைக்கிளீனர்ஸ்**
பஸ்நிலையம் யாழ்ப்பாணம்.
கிளைகள்
**சன்லைற் மல்ரி சேவிஸ்**
சன்லைற் தொலைத் தொடர்புச் சேவை
கச்சேரியடி - யாழ்ப்பாணம்.
T. P: 2714 [கி-758]

## நல்லையில் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய இந்துப் பேரவையின் நல்லைக் கந்தன் உற்சவ காலத் தெய்வீக நிகழ்ச்சிகள் தொடரில் இன்று திங்கக்கிழமை ———— "ஆன்மீகத்தில் அருணையர்" என்னும் பொருளில் சிவத்திரு அன்னதாசன் க. ஆனந்தராஜா சொற்பொழிவாற்றவுள்ளார்.

இந்நிகழ்வு அறுபத்துமூன்று நாயன்மார் மடத்தில் பி.ப. 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது. (செ)

### கோவில்களும்...

உள்ள போதும் நல்லைக் கந்தன் தன் குடையின் கீழ் வரும் அடியவர்களை காத்தது இரட்சிக்கிறான் என்பது அழகொளிரும் நல்லை நகரின் கண் தெரிகிறது:

சமயங்களும், கோயில்களும், கிரியைகளும், உருவாக்கப் பட்டது மக்களை நெறிப்படுத்தி அவர்களின் தெய்வத்துவத்தை உணர செய்யவே துரதிஸ்டவசமாக இன்று அனேக இடங்களில் நடைபெறும் சமய நிகழ்வுகள் எதற்காக நடக்கின்றது என்று கேள்வி மனத்தின் கண் மேலோங்குகிறது கிரியைகளையும், சமய நிகழ்வுகளையும் புறப் பொருளாக பார்ப்பதை விடுத்து அவற்றின் உள் மறைந்து கிடக்கும் உண்மைகளை வெளிக் கொணர்தல் அவசியமாகிறது!

'உள்ளம் பெருங் கோயில் ஊனுடம் பாலயம்' எனும் திருமந்திர வரிகளும்.

'வெள்ளைநிற மலரும் அல்ல, வேறெந்த பூவும் அல்ல உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது' எனும் சுவாமி விபுலானந்தரின் பாடல் வரிகளையும்,

'நெஞ்சமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே மஞ்சன நீர்' எனும் தாயுமானவரின் வரிகளையும் எம்மில், பலர் புரியாமல் இருப்பதும் வேதனை பயக்கிறது.

எனவே 'நல்லையில் அருளாட்சி நடக்கின்றது' என்பது எம் பெருமானின் ஆட்சியின்கீழ் வாழும் எம்ஒவ்வொருவருடைய வாழ்வியலிலுமே தங்கியுள்ளது என்பதை உணர்ந்து வாழ்வோமாக:

'ஆறுமுகம் இருக்க, அவன் கைவேலிருக்க வேறு துணை யாரெனக்கு வேண்டும் வெற்றி வேலன் அவன் தாழ் பணிய வேண்டும்'

### விஞ்ஞானபீடம்
### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
### 2000/2001 கல்வியாண்டு
### புதிதாக சேர்க்கப்படும் மாணவர்கள்

2000/2001 ஆம் கல்வியாண்டிற்கு விஞ்ஞான பீடத்திற்கு அனுமதி பெற்ற மாணவர்களுக்கான அறிமுகக் கூட்டம் 25-09-2000 ஆம் திகதி மு.ப 9.30 மணிக்கு பௌதிகவியல் விரிவுரை மண்டபத்தில் நடைபெறும். அடிப்படைக் கற்கை நெறிகளாகிய கணனிப் பாடநெறியும், ஆங்கிலப் பாடநெறியும் 26-09-2000 தொடக்கம்02-11-2000 வரை நடத்தப்படும். யாழ். பல்கலைக்கழகத்தில் 2000/2001 கல்வியாண்டிற்கு தங்களைப் பதிவு செய்த மாணவர்கள் யாவரும்இந்தநிகழ்ச்சிக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கணனி விஞ்ஞானத்தை முதலாவது வருடத்தில் ஒரு பாடமாகக் கற்க விரும்பும் மாணவர்கள் விஞ்ஞான பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக் கூடிய விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து 20-10-2000ஆம்திகதிக்கு முன் பீடாதிபதி அலுவலகத்தில் கையளிக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர். தெரிவு க.பொ.த (உ/த) பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில்அமையும்.

விஞ்ஞானபீட விரிவுரை வகுப்புக்கள் 06-11-2000 இல் ஆரம்பமாகும்.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.
24-08-2000
(கி/742)

★ யாழ் நகரில்
★ மிகவும் அமைதியான சூழலில்
★ குடும்பத்துடன், நண்பர்களுடன் சுவைத்து மகிழ

**"சூர்யா சைனீஸ்"**

சூப் வகைகளா
புரியாணி (F) பிறைற் றைஸ் வகைகளா
மேல் நாட்டு உணவு வகைகளா
மற்றும் ஆடர்கள் பிரத்தியோகமாக கவனிக்கப்படும்.
ஒரு முறை சுவைத்தால் மறுமுறை சுவைக்கத் தோன்றும்.
'சூர்யா சைனீஸ்' சுவைப் பிரியர்களின் சொர்க்கம்
163, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(கி/751)

சிவமயம்

## அந்தியேட்டிசபிண்டீகரணஅழைப்பிதழ்

அன்புடையீர்,

**அமரர் மார்க்கண்டு அன்னம்**



அவர்களின்
அந்தியேட்டிக் கிரியைகள்
இன்று 28.8.2000 திங்கட்கிழமை
அச்சுவேலியிலுள்ள எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்மாசந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர் சார்பில்
அதிபர் க. இராசதுரை
(யாழ்ப்பாண மத்திய கல்லூரி)
"இராமானந்தா"
அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி. (கி/753)

தேரேறி வருகின்றான் எங்கள் வினை தீர்க்கும்
நல்லூர் வேலனவன்
சகல விதமான புடவைகளுக்கும்
நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

**சீமாட்டி புடவைக்கடல்**
இல. 122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 2196
(கி/745)

**ஸ்ரீராம் நாதன் களஞ்சியம்**
சர்வதேச, உள்நாட்டு
தொலைத் தொடர்புகள் பெற்றுத் தரப்படும்.
தொலைபேசி இல : 021:2916
213 C, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-757)

# நகரசபை குண்டுத் தாக்குதல் சந்தேகநபர்கள் விடுதலை

(கொழும்பு)

கொழும்பு நகரசபை மைதானத்தில் ஜனாதிபதி மீதான தற்கொலை குண்டுத் தாக்குதலில் தொடர்பு உடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த இருவரையும் விடுதலை செய்யுமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

குருநாதன் சிவநாதன், செல்லையா குலவீரசிங்கம் ஆகிய இருவர் மீதும் சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுகள் நிரூபிக்கப்படாதமையால் அவர்களை விடுதலை செய்யுமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்த இருவரும் கடந்த பெப்ரவரி மாதம் 28ம் திகதி பாணந்துறையில் வைத்து பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ந)

# இடம்பெயர்ந்த மக்களுக்கு விசேடவாக்களிப்பு நிலையம்

## யாழ் அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது யாழ் குடாநாட்டிலிருந்து இடம் பெயர்ந்துள்ள மக்களின் வசதி கருதி அவர்கள் இருக்கும் இடங்களில் வாக்குச் சாவடிகள் அமைக்கவிருப்பதாக அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் தெரிவித்துள்ளார்.

தேர்தல் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாளை திங்கட்கிழமை தேர்தலுக்கான வேட்பு மனுவைதாக்கல் செய்வதற்குரிய ஏற்பாடுகள் யாவும் செய்யப்பட்டுள்ளதாகவும், யாழ். செயலகத்திலேயே தேர்தல் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்படுமெனவும் குறிப்பிட்டார்.

இடம்பெயர்ந்த மக்கள் கூடுதலாக இருக்கும் பகுதிகளில் அவர்கள் எதுவித கஷ்டமுமின்றி வாக்களிப்பதற்கு வசதியாக அவர்கள் தங்கியுள்ள பிரதேசங்களில் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாகவும் அரச அதிபர் தெரிவித்தார். (வ)

# கணனி மயப்படுத்தப்படவுள்ள கூட்டுறவுத்துறை செயற்பாடுகள்

(கொழும்பு)

கூட்டுறவு துறையின் வியாபார நடவடிக்கைகள் அனைத்தும் கணனி மயமாக்கப்படவுள்ளதாக இத்துறையின் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இன்னும் ஒருசில மாதங்களில் இந் நடைமுறை அமுலிற்கு வரும் என்றும் இச் செயற்பாடு கூட்டுறவு துறையின் வளர்ச்சியை மேன்மைப் படுத்தும் எனவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (க-2)

## ப.நோ.கூ.சங்கங்களில்,

# ஒக்ரோபர் மாத நிவாரணத்தை முன்கூட்டியேகையிருப்பில் வைக்கத்திட்டம்

(யாழ்ப்பாணம்)

ஒக்ரோபர் மாதத்திற்குரிய நிவாரணப் பொருட்களை முன்கூட்டியே பெற்று கையிருப்பில் வைக்குமாறு நேற்று முன்தினம் செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தின் போது, செயலக அதிகாரிகளால் பலநோக்குக்கூட்டுறவுச்சங்க அதிகாரிகளும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் த.வைத்தியலிங்கம் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் மேற்படி அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல் கடமைகளில் செயலக ஊழியர்கள் ஈடுபடவிருப்பதால் ஒக்ரோபர் மாத நிவாரணப்பொருட்கள் பொதுமக்களை சென்றடைவதில் தாமதம் ஏற்படலாம் என்பதை கருத்தில் கொண்டே தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இக் கலந்துரையாடலின் போது, குழந்தைக்கான லக்ரோஜன் பால்மா பெருமளவு தேங்கிக்கிடப்பது தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பிரதேச செயலர்கள, பலநோக்கு கூட்டுறவுச் சங்க பொதுமுகாமையாளர்கள், தலைவர்கள், பெற்றோலியக் கூட்டுறவுத்தாபன அதிகாரிகள், வெதுப்பக உரிமையாளர் சங்கத்தினர் ஆகியோர் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். (உ-3)

## யாழ். திறந்த பல்கலைக்கழக

# குறைபாடுகள் குறித்து விரிவாக ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திறந்த பல்கலைக்கழகத்தின் குறைபாடுகள் குறித்து அண்மையில் ஈ.பி.டி.பி அலுவலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இதன்போது முன்பு கற்பிக்கப்பட்ட இதழியல் சட்டமாணி போன்ற பாடங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும் எனவும் இதற்காக விண்ணப்பித்த மாணவர்களின் அனுமதி சம்பந்தமான நடவடிக்கை மேற் கொள்ளப் படவேண்டும் எனவும் கூறப்பட்டது.

பாடங்களோ அல்லது போதிய ஆசிரியர்களோ அற்ற நிலையிலே இப் பல்கலைக்கழக கற்றல் செயற்பாடுகள் நடைபெறுவதாயும் இப்பிரச்சினையை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப் படவில்லை யெனவும் கூறப்பட்டது. (த-12)

# சைக்கிள் திருட்டு

(சங்கானை)

சங்கானை சந்தையில் விடப்பட்ட சைக்கிள் ஒன்று கடந்த 21 ம் திகதி காணாமல் போயுள்ளது.

கா. சிவலிங்கம் என்பவருடைய சைக்கிளே இவ்வாறு காணமல் போயுள்ளது.

இச்சந்தையினுள் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் இருந்தும் களவு போயுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-19)

# ‘சின்னவனாபெரியவனா’சிந்துநடை

# கூத்துநூல் காலத்தால் அழியாதது

## யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் தெரிவிப்பு

(நல்லூர்)

கூத்துக்கலை சம்பந்தமான நூல் எழுதப்படும் சமயத்தில், கலாபூஷணம் நவாலியூர் நா. செல்லத்துரையின்’ சின்னவனா பெரியவனா’ என்ற சிந்துநடைக்கூத்து நிச்சயமாக இடம்பெறவேண்டிய தொன்றாகும் இது காலத்தால் அழியாதஒன்றாகும்.

இவ்வாறு யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத்தலைவர், கலாநிதி. எஸ். சிவலிங்கராஜா, நவாலி வை. எம். சி. ஏ. மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற, கலாபூஷணம்-நவாலியூர் நா. செல்லத்துரையின் ‘சின்னவனா பெரியவனா’ சிந்து நடைக்கூத்துநூல் அறிமுக விழாவின்போது கலந்து கருத்துரையாற்றுகையில் கூறினார்.

தென்னிந்திய திருச்சபையின் பேராயர், எஸ். ஜெயநேசன் தலைமையில் நடைபெற்ற மேற்படிநிகழ்வில்,

‘மிகவும் உயர்வான, பரந்தபண்பட்ட, அற்புதமான, அருமையான கவிப்படைப்பு ‘சின்னவனா பெரியவனா’ கூத்து நூல். பாடல்கள் நன்கு அமைந்துள்ளன.

நவாலியூரைச்சேர்ந்த கலைஞர்களான, பாலுமகேந்திரா, அருமைநாயகம், இன்பராஜ் போன்றவர்கள் வரிசையில் பாராட்டத்தக்கவர் நூலாசிரியர் கலாபூஷணம் செல்லத்துரை.

‘சின்னவனா பெரியவனா’ என்ற சிந்துநடைக்கூத்தினை யாழ்ப்பாணக் கல்லூரியில் மேடையேற்றுவித்த பெருமை எம்மைச்சாரும். கண்டியில் இருந்தகாலத்தில், அதாவது- 1959 ஆம் ஆண்டுமுதல் 1983 ஆம் ஆண்டுவரை, மலையகத்தில்- கலாபூஷணம் செல்லத்துரையின் கலைப் படைப்புகளை ரசிக்கமுடிந்தது எனக்குறிப்பிட்டார்.

இவ்விழாவின்போது வாழ்த்துரைநிகழ்த்திய, கலாநிதி. காரை. செ. சுந்தரம் பிள்ளை குறிப்பிட்டதாவது,

‘எல்லோராலும் போற்றப் பெறுகின்ற நவாலியூர் சோமசுந்தரப்புலவர், கலையரசுசொர்ணலிங்கம் போன்ற பெரியார்களின்வரிசையில் போற்றத்தக்கவராக விளங்குபவர் கலாபூஷணம், நாவாலியூர் நா. செல்லத்துரை.

வலிகாமம் கல்விவலய உதவிக்கல்விப்பணிப்பாளரும் பிரபல எழுத்தாளருமான திருமதி கோகிலா மகேந்திரன், உட்பட பிரமுகர்கள் பலர் கருத்துரைவழங்கினார்கள். (க-103)

# இராசி பலன்

28-8-2000

(ஆவணி 12 திங்கள்)

சதுர்த்தசிமாலை 6.44வரை

ஆயிலியம் மு.இ7.57 வரை

இராகுகாலம் 7,35-9.05

சுபநேரம் 12- 05-1-35

**மேடம்**

உறவினர் நம்பிக்கையின்மை, காரியம் கைகூடும், தெய்வானுகூலம், சிறுவியாதி

**இடபம்**

மனச்சந்தோசம், பணவரவு எடுத்த காரியம் வெற்றி, எதிர்பாராத சில பிரச்சினை.

**மிதுனம்**

வாக்குவாதம், தொழில் முயற்சியில் வருமானம் குறைவு, உஷ்ண ரோகம், திடீர்நன்மையான சம்பவம்.

**கடகம்**

பிரயாணம், உடல்நலசுகம் இருப்பிடத்தில் வீண் பிரச்சினை, குடும்பக் கவலை.

**சிங்கம்**

எடுத்த காரியம் தாமதம் ஏற்படும் பொருளாதாரம் வீழ்ச்சி, அலைச்சல்,வியாதி.

**கன்னி**

எதிர்பாராத வருமானம், குடும்பசுகம், செல்வாக்கு அதிகம், பிரயாணம்.

**துலாம்**

தொழில் மேன்மை, பணச் செலவு, இடமாற்றம்.

**விருச்சிகம்**

மனக்கிலேசம், புதிய தொழில் முயற்சி தாமதம், காரிய வெற்றி, உறவினர் வருகை.

**தனு**

வீண் விதண்டாவாதம், பிரயாண பயம், குடல்சம்பந்தமான நோய்,

**மகரம்**

புதிய உறவுகள், கடிதவரவு சுவாரஷ்யம், காரிய வெற்றி

**கும்பம்**

மனச்சந்தோசம், புதிய தொழில் முயற்சி, இராஜமரியாதை.

**மீனம்**

புத்திரரால் கவலை, சிறுவியாதி,மனஸ்தாபம், சென்ற இடத்தில் செல்வாக்கு.

[பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது]

வளவன்

# சேதமாக்கப்பட்ட வணக்கஸ்தலங்களிற்கு நட்டஈடு வழங்கல் மும்முரம்

(மட்டக்களப்பு)

வன்செயல்களின் போது தேசமாக்கப்பட்ட வணக்கஸ்தலங்களிற்கு துறைமுக அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு இழப்பீடுகளை வழங்கி வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மவட்டத்தில் உள்ள 3 வணக்க ஸ்தலங்களிற்கு சுமார் 21 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் இ. மௌனகுருசாமி ஆலய நிர்வாகிகளிடம் கையளித்தார்.

ஆரையம்பதி, காத்தான்குடி, மட்டக்களப்பு பிரதேசங்களில் உள்ள ஆலயங்களின் நிர்வாகப் பணிளுக்கே இந்நிதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வைபவத்தின் போது பல அதிகாரிகளும் சமூகமளித்திருந்தனர்.

இதேவேளையில் வடபகுதியில் சேதமாக்கப்பட்ட வணக்க ஸ்தலங்கள் எல்லாவற்றுக்கும் நட்டஈடுவழங்கப் படவில்லையென சமய அபிமானிகள் பலரும் கவலை வெளியிட்டுள்ளனர்.

# மட்டக்களப்பில் தொடரும் காற்று அவல நிலையில் பொதுமக்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களபு மாவட்டத்தில் கடந்த சில நாட்களாய் வீசும் கடுமையான கச்சான் காற்றினால் இப்பகுதி மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இக் காற்றினால் ஏற்படட தீ பரவியதில் மட்டப்களப்பு புதூர் பகுதியைச் சேர்ந்த சண்முகம்பிள்ளை அன்னமுத்து (வயது80)எனும் மூதாட்டி தியில்கருகி மரணமடைந்துள்ளார்.

அடுப்பில் இருந்த நெருப்பு கடும் காற்றுடன் குடிசைகுள் பரவியதில் இம் மூதாட்டி மரணமடைந்துள்ளதாக மட்டப்களப்பு வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தினமும் காலை 9.00 மணி முதல் மாலை 7.00 மணி வரையும் அசுர வேகத்துடன் காற்று வீசுகின்றது.

இதனால் ஓலைக்குடிசைகளின் கூரைகள் காற்றில் பறக்கின்றன. வீதிகளில் சைக்கிள், மோட்டார் சைக்கிள்களில் செல்லும் மக்கள் அவதியுறுகின்றனர். காற்றின் வேகம் காரணமாக மீனவர் ஆழ்கடலிற்கு செல்வதற்கு அச்சம் தெரிவித்துள்னர் (சு-60)

# மாநகர சபையின் மாதாந்த கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி பிரதி முதல்வர் என். ரவிராஜ்தலைமையில் இடம் பெறவுளளது.

இது தொடர்பான அறிவித்தல்சம்பந்தப்பட்டஅனைவர்க்கும் கடிதமூலம் அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாக மாநகர சபை வட்டாரங்கள்தெரிவித்துள்ளன. (உ)

# இளைஞன் மரணம்

(யாழ்ப்பாணம்)

வண்ணார் பண்ணைகேசாவில் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் ஜெயராஜ் (வயது20) என்ற இளைஞன் நேற்று முன்தினம் மாலை ஐந்து மணியளவில் கழுத்தில சுருக்கிட்ட நிலையில்மரணமடைந்துள்ளார்.

வீட்டில் எவரும் இல்லாத வேளையில் இச்சம்பவம் இடம் பெற்றது.

மேற்படி இளைஞனின் சடலம் மேலதிகவிசாரணைகளுக்காக யாழ் போதனா வைத்திய சாலையில் வைக்கப் பட்டுள்ளது. (க)

# பாடசாலை விடுமுறை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தனின் தேர், தீர்தத உற்சவங்களை முன்னிட்டு 28 ஆம் 29 ஆம் திகதிகளில் யாழ் புனித மரியாள் வித்தியாலயம் நடைபெற மாட்டாதென அதிபர் எம். செபஸ்ரியம்பிள்ளை அறிவித்துள்ளார் (உ)

# சகோதரர் இருவர் படுகாயம்

(வவுனியா)

பனங்காமம் பகுதியில் மர்மப்பொருள் ஒன்று வெடித்ததில் சகோதரர் இருவர் படுகாயம் அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று இடப்பெற்ற இச் சம்பவத்தில் ஏகாம்பரம் லோகேஸ்வரன் (வயது 16) இவரது சகோதரரான தவககுமார் ஆகிய இருவருமே படுகாயம் அடைந்தவர்களாவர்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# நல்லூர் முருகன் தேர்

## கோவில்களும் கிரியைகளுமே மனித அவலங்களைத் தீர்க்கும் அருமருந்து

மனிதனுடைய வாழ்வின் 'நிலையாமை' என்பது இன்று எமது தேசம் எங்கும் வெளிக்காட்டப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில், அடுத்த நிமிடம் எது நடக்குமோ என ஏங்கித் தவிக்கும் மக்களுக்கு எல்லாம் எதிர் காலத்தின் மீது நம்பிக்கையை ஏற்படுத்தி வாழ்க்கையை ஒட்டிக் கொண்டிருப்பது என்றால் அது தெய்வீசப்பற்று, இறை நம்பிக்கையே, ஆன்மீக நிழலின் கீழ், இறைவன் மேல் உள்ள உறுதியான நம்பிக்கையில் தான் எமது அடுத்த கண நடவடிக்கைகளைத் தொடங்க வேண்டியுள்ளது. 'அந்த இறை நம்பிக்கை, ஆன்மீகபகுதி இன்னமும் எம்மைவிட்டு போகாமல் இருப்பதற்கு காரணம் கோயில்களும், அங்கு நடைபெறும் கிரியைகளுமே; அந்த வகையில் தொன்றுதொட்டு, இன்றுவரை யாழ்ப்பாண மக்களின் தெய்வீகத்தன்மையை தக்கவைத்து எமது கலாசாரம் 'கந்தபுராண கலாசாரம்' என்றபெயரை பேணுவதில் நல்லூர் கந்தன் ஆலயம் பெரும் பங்காற்றி வந்துள்ளது. ஆறுமுகநாவலர், யோகர்சுவாமிகள் வரிசையில் எமது ஆன்மீக சொத்துக்களான துறவிகளையும், ஞானிகளையும் இன்றும் உருவாக்கிக் கொண்டுள்ள பெருமை இக் கோயிலையே

லாம்| நிர்மலமாக்கி, நிமலன் பாதமே நினைப்பாக்கும் தினங்களே நல்லூர் கந்தனின் உற்சவகாலதினங்கள்.

ஊரும் புனிதம், உள்ளமும் புனிதம் என எங்கு பார்த்தாலும், தெய்வீகப்பரவசம் எல்லோர் முகதிதிலும் தவழும். நல்லூரானின் விபூதி வாழ்வின் உண்மையினை ஒவ்வொருவரும் தமக்குள் பகர்ந்து கொள்ளச் செய்கின்றன. கெடுவாய் மனனே கதிகேள் கரவாதிடுவாய் வடிவேல் இறைதாள் நினைவாய்' எனும் கந்தரனு பூதி அடியொற்றி, செல்வந்தர்கள்

> நல்லூரில் கூடும் பல்லாயிரக் கணக்கான பக்தர்களையும் அவன் தன் நேரடி அருள் கதிர்ப்பலையினுள் கவர்ந்து வைத்துள்ளான்; அடியவர்கள் இறைவனுடன் வைத்துள்ள உறவுக்கு ''இணைப்பாளர்'' எவரும் வேண்டியதில்லை. ஆண்டவன் அடியவர்கள் தொடர்பு இடை இணைப்பாளர் அற்ற நேரடித் தொடர்பு.

சாரும் என்பது ஒரு பெருமைக்குரிய விடயமாகும்.

கால ஓட்டத்தில் ஆன்மீக பாரம்பரியங்களும், கலாச்சாரப்பண்பாடுகளும் பறிபோய்க் கொண்டுள்ள இக் காலத்தில் இதன் பாதிப்பினுள் வேகமாக புகுந்து கொண்டுள்ள, இளைஞர், யுவதிகளைக் கூட கவர்ந்து இழுத்து தெய்வீகத்தையும், பண்பாட்டையும் காப்பாற்றிக் கொண்டிருப்பதில், நல்லூர் கந்தன் ஆலயம் தனிச்சிறப்புப் பெற்று முன்னிற்கிறது என்பது. இப்போது நடக்கும் உற்சவகாலத்தில், இவர்கள் வெகு ஆர்வத்துடன் அங்கப் பிரதட்டை எடுத்தல், அடி அழித்தல், சுவாமி காவுதல், நேரம் தவறாமல் பூசை காண எம்பெருமான் சந்நிதிக்கு ஓடிவருவதில் இருந்தெல்லாம் தெளிவாகிறது. இவற்றினை எல்லாம் அமைதியாய் இருந்து இறையாட்சி

**குணராசா நக்கீரன்**

செய்யும் நல்லைக் கந்தனின் பெருமை சொல்லில் அடங்காது.

'நல்லூரான் திருவடியை நான் நினைத்த மாத்திரத்தில் எல்லாம் மறப்பேனடி' எனும் யோகர்சுவாமியின் நற்சிந்தனைப் பாடலின் உள் உணர்வினை ஒவ்வொருவரும் எல்லாம், அன்னதானம்' ஆகாரதானம் என கரவாது இட்டு, வடிவேலனின் அருள் தேட முனைவதைக்காண முடிகிறது.

இங்கு மட்டுமன்றி உலகெங்கும். வாழும் எம்மவர் மனங்களில் எல்லாமே ஆவணி பிறந்து விட்டால் நல்லை ஆண்டவனின் அருள் பார்வைக்காய் ஏங்குவது, ஒவ்வொருவருட உற்சவகாலங்களிலும் எத்தனையிடையூறுகள் இருப்பினும் நல்லூர் கந்தனிடம் ஒப்படைத்து, இங்கு வந்திறங்கும் பக்தர்கள் கூட்டம் சான்றாகிறது.

மணிக்கூட்டு முள் ஒலிக்கையில் பூசைமணியும் சேர்ந்து, ஒலிக்கும் தன்மை கொண்ட பூசைகளும் சைவக்கலாசாரத்தன்மை குலையவிடாது காக்கும் பாரம்பரிய முறைகளும், வேத, உபநிடத காலம் தொட்டு கோயில்களால் வளர்க்கப்பட்டு வந்த இசைமரபுகள் தொடரும் வகையில் உற்சவ காலங்களில்நிகழ்த்தப்படும் நிகழ்ச்சிகள், மற்றும் கோயில் கட்டட நிர்மாண அமைப்பு, சுவரோவியங்கள், அனைத்தும் தென் இந்திய திருத்தலங்களுக்கு நிகரானதாக எமது மண்ணுக்கு பெருமை சேர்கிறது. புன்னகை தவழும் எம்பெருமானின் உடல் முழுவதும் பொன்னகைகள் வந்து


தேரேறி வருகின்ற நல்லை ஆறுமுகனே சரணம்
சகல விதமான கட்டடப் பொருட்கள்; C/C பெயின்ற்,
சீமெந்து விற்பனையாளர்கள்

**கஜமுகன் ஹாட் வெயர்ஸ்**

147, 149 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 2833 (இ/744)

வேல் முருகா; மால் மருகா தேரேறி வா சண்முகா

**குகன் ஸ்ரோர்ஸ்**

(பலசரக்கு மொத்த, சில்லறை வியாபாரம்)
180, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல:- 2027 (கி/746)

கந்தா சரணம், கலியுக வரதா சரணம்
தேரேறி காத்தருளும் நல்லூரானே சரணம்

**S.V.M பிறைவேட் லிமிடெட்**

(பலசரக்கு மொத்த, சில்லறை வியாபாரம்)
154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 2202 (கி/747)

நல்லூரில் தேரேறும் முருகா! நம்நாட்டில்
அல்லற்படும் அனைவரையும் காத்தருள வேண்டும்

**எம்மைக் காத்திட எழிலான தேரேறி வருக!**



## எம்மைக் காத்திட எழிலான தேரேறி வருக!



ஆருடன் நோவோம் ஆர்க் கெடுத்து ரைப்போம்
ஆறாத சோகமுடன் அவலம் பெருகிறதே
வேரறுந்து தமிழினம் விம்மித் துடிக்கிறதே
வேல் ஏந்தி மயிலேறி விரைவாக வா முருகா!
நேருக்கு நேரின்று நின் எதிரியை அழித்து
நிம்மதி கொடுத்தாய் தேவர்கள் மகிழ்ந்தார்-இன்று
பாரிலே தமிழன் படும்பாடு பார்த்து நீ இருப்பதா
பார்வதி மைந்தனே எம்மைக் காத்திட தேரேறி வருக!

பெரிய கடை வீதியிலே பிரியமுள்ள புடவையகம்

# சிவகணேசன் ஸ்ரோர்ஸ்

41, பெரிய கடை யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல: 2063

[கி/750]


எனும் யோகர்சுவாமியின் நற்சிந்தனைப் பாடலின் உள் உணர்வினை ஒவ்வொருவரும் பெறுகின்றனர் என்பது அவர் தம்செயலில் காணமுடிகிறது.

பொன்னும் மணியும் புனைந்து பூமொட்டு மாலை அணிந்து கண்ணுக்கினிய காட்சி தரும் ஆறுமுகன் திருவுருவம், தங்கமயிலின் மீது தங்க வேலோனின் உலா, அபயக்கரம் காட்டி மஞ்சத்தமர்ந்து வரும் முத்துக்குமரனின் அருள் பார்வையும், விஞ்சி நிற்கும் விளைகளையும வீரன் கைவேலும், நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந்துருகச் செய்து, நினைப்பையெல் சேர்கிறது. புன்னகை தவழும் எம்பெருமானின் உடல் முழுவதும் பொன்னகைகள் வந்து குவிவதும், எம்மவர்கள் நல்லூர் கந்தவேளின் மேல் கொண்டுள்ள அளவு கடந்த பக்தியையும் அன்பையும் பறைசாற்றுகிறது.

ஆறுமுகன் அருளைப் பெற அடியவர்கள் ஒவ்வொருவரும் தம்மால் இயன்ற சரியை கிரியை முறைகளான மார்க்கத்தை பின்பற்றி கந்தனுக்கு சேவை செய்வது உள்ளத்துக்கு உவப்பாக உள்ளது.

எங்கும் போரின் கொடூரங்கள் வெளிப்படுத்தப்பட்டு

(2 ஆம் பக்கம் பார்க்க)


தேரேறி அருள்மழை பொழியும் நல்லைக் கந்தன் பாதமலர் பணிகின்றோம்

# இ. ச. பேரம்பலம் சக நிறுவனம்

## 50, 52, 54 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி : 2988. தொலைநகல் ! 2368

(சி-743)

# ர் சிறப்பு மலர் - 2000



## ஆதீன சுவாமிகளின் ஆசியுரை!

தமிழ்க் கடவுள் முருகன் இன்று தேர் ஏறி வீதி உலா வருகிறான். அவனது திருக் கரத்திலங்கும் ஞானவேல் நல்லெண்ணம் கொண்ட மக்களை மலியச் செய்து அல்லல்அறுக்க வேண்டும் என்று மன தார வாழ்த்த விழைகிறேன்.

கோயிவில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம். நீறில்லா நெற்றி யாழ். என்ற அனுபவ மொழிகளுக்கமைய நல்லவர் போற்றும் நல்லூரில் முருகன் குடி கொண்டிருப்பதே நாம் செய்த தவப்பயனாகும், எண்ணற்ற பக்த கோடி நாளும் நற்றமிழ் முருகனை நாடி, ஓடி வருவதைக் காணலாம், சன சமுத்திரம் முருகன் திருநாமம் கூறி விழிநீர் சொரிய கூப்பிய கரத்தராய் நிற்கும் பக்தி நிலையைக் காணும் இன்பவிழா தேர்த்திருவிழா மயிலேறும் பெருமான் அயிலோடு வந்து அருவினைகள் போக்கும் ஆனந்தக் கோலம் அகத்தை அள்ள அரோகரா ஒலி வானைப் பிளக்க, தீப ஒளி மனவிருளைப் போக்க மன்றாடி நிற்கும் பக்த கோடிகள் வையத்தில் நல்ல வண்ணம் வாழ்க வென வாழ்த்துகிறேன். இன்றைக்கு மக்கள் தாங்கொணாத் துன்பச்சுமையால் வாடிவதங்குகிறார்கள். அன்று அசுரரை அழித்துத் தேவர் சிறை மீட்ட தேவ சேனாபதி மக்கள் துயர் போக்கும் பெருவிழா இதுவாகும்.

ஔவைக்குச் சுட்ட பழம் கொடுத்த கார்த்திகேயன் ஞான சம்பந்தனாய் அவதரித்து மேன்மை கொள் சைவ நீதி உலகெலாம் உய்யவைத்ததே போல் இன்றைய இன்னல்கள் மாய அவனடிகளைச் சிக்கெனப் பிடிப்போமாக.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
பரமாச்சாரிய சுவாமிகள்
நல்லை ஆதீனம்


## வாழ்த்துரை

'நல்லைப் பதிவாழ் ஞான குமரா
வல்லமை தந்து வாழவைப்பாயே'

நல்லைக் குமரனுக்கு தேர்விழா. நமக்கெல்லாம் உவகை தரும் பெருவிழா, 'முருகா சரணம் சரணம்' என்று முழங்கி நிற்கும் பக்தர் கூட்டத்தின் பரவசம்; மலைபோல் குவித்திருக்கும் தேங்காய்களை சிதறு

## தேரினில் இறைவனின் தரிசனம்!

தேரின் உறுப்புக்கள் சில்லுகள், கீழண்டம், பீடம், மேலண்டம், முடி. திருவடி நிழல் ஆக ஆறுபிரிவாகும். இந்த ஆறு பிரிவுகளைக் கொண்ட தேர் அண்ட, பிண்டசொரூபமாயமைந்துள்ளது. இதில் அமைந்துள்ள சக்கரங்கள் நால்வகை மார்க்கங்களான சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவற்றைப் பற்றிய ஆன்மாக்கள் உலகில் உருள்பவையாகவும், தேரின் கீழண்டம் மூவுலகங்களான வானுலகம், மண்ணுலகம், பாதாள உலகங்களின் வாழ்க்கைகளைச் சித்தரிப்பதாகவும், பீடம் ஆன்மாக்கள் இறைவனின் திருவருளைப் பெறும் இறைவனின் ஆசன பீடமாகவும் மேலண்டம் இறைவனின் திருக்காட்சிக் கோலங்கள் எமக்கு உணர்த்



தும் அமைப்புக்களை எடுத்து விளக்குவதாகவும், கலசமாகிய தேர்முடி ஆன்மா இறைவயப்பட்டு நிற்பதனையும், திருவடி நிழலாகிய உச்சிக்குடை, ஆன்மா இறைவனின் சர்வ வியாபகத்துள்ளும் அடக்கப்பட்டிருத்தலையும் காட்டுகின்றது

தேரின் பிண்ட சொரூபமானது கால்கள், உடம்பு, கழுத்து, தலை என்பவற்றைத் தன்னுள் அடக்கியதா

வண்ணத் தேரேறி வருகின்ற
நல்லூரான் பாதம் பணிந்தோம்
அற்புதா ரேடிங் கொம்பனி
198, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(கி/754)

அசல் றிக்கோ கோப்பியை
உடனுக்குடன் அரைத்துப் பெற்றுக்கொள்ள
ஐஸ்கிறீம் வகைகள்
கோழிப் பிரியாணி
சுவைத்து மகிழ்ந்திட
★ RIECOH ★
றிக்கோ
370, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி சேவையும் உண்டு
T P 2193 (கி/756)

பஞ்சம் பசி வந்தாலும்; பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களடி; நல்லூரான் தஞ்சமடி
கல்யாணி கிறீம் ஹவுஸ்
★ ஐஸ்கிறீம் வகைகள் ★
● சொக்லட் கிறிப்ஸ்
● கல்யாணி ஸ்பெஷல் ஐஸ்கிறீம்
● புருட்சலாட் ஐஸ்கிறீம்
● வனிலா ஐஸ்கிறீம்
● சொக்லட் ஐஸ்கிறீம்
● ஜெலி ஐஸ்கிறீம்
● நட்ஸ் ஐஸ்கிறீம்
மட்டன் றோல், கட்லட், பற்றிஸ், கேக், மஸ்கட்
பீடா, குளிர்பான வகைகள்
யாவற்றையும் சுவைத்து மகிழ நீங்கள்
நாட வேண்டிய ஸ்தாபனம்
73, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 2881 (கி/749)

கந்தா சரணம்! கதிர்வேலா சரணம்!
நல்லூர் வாசா சரணம்!
தர்சினி பான்சி ஹவுஸ்
126, மின்சார நிலைய வீதி,

'நல்லைப் பதிவாழ் ஞான குமரா
வல்லமை தந்து வாழவைப்பாயே'

நல்லைக் குமரனுக்கு தேர்விழா. நமக்கெல்லாம் உவகை தரும் பெருவிழா, 'முருகா சரணம் சரணம்' என்று முழங்கி நிற்கும் பக்தர் கூட்டத்தின் பரவசம்; மலைபோல் குவித்திருக்கும் தேங்காய்களை சிதறு தேங்காயாக அடித்து மகிழும் அடியார் கூட்டம், ஆடி ஆடிப் பவனிவரும் அபிஷேகக் கந்தனின் அலங்காரம், இவற்றை எல்லாம் கண்டு தரிசிக்க என்ன தவம் செய்தோமோ என்று ஏங்கிப் பரவச மடையும் திருக் கூட்டம்;

இவற்றை யெல்லாம் எண்ணி எண்ணி எமது பொல்லாப்புகளிலிருந்து நீங்குவோம்.

'பஞ்சம் படை வந்தாலும் பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களடி'

என்று கிளிக்கண்ணி பாடுவோம். எமக்கெல்லாம் விடிவு ஏற்படட்டும். அவலக் கண்ணீர ஆனந்தக் கண்ணீராக மாற்றி ஐயன் பாதத்தை அகத்திலும் புறத்திலும் இருத்துவோமாக.

சிவத்தமிழ்ச் செல்வி
கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி

ளும் அடக்கப்பட்டிருத்தலை யும் காட்டுகின்றது

தேரின் பிண்ட சொரூப மானது கால்கள், உடம்பு, கழுத்து, தலை என்பவற் றைத் தன்னுள் அடக்கியதா கவும்-கால்களாக சக்கரங்க

## நீர்வை மணி

ளும் தேரின் முதலாமடுக்கும், உடம்பாக பீடமும், அதன் மேற்பகுதியும், கழுத்தாக மேலண்டத்திற்கும், கீழண் டத்திற்கும் இடைப்பட்டபகு தியும், தலையாக மேலண் டத்திற்கு மேற்பட்ட முடி யுடன்சேர்ந்த பகுதியும்அமை கின்றது.

மானுட சரீரம் ரதமாக

(2ஆம் பக்கம் பார்க்க)


# தர்சினி பான்சி ஹவுஸ்

126, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

கிளை:

## புதிய தர்சினி பான்சி ஹவுஸ்

10, நவீன சந்தை, (உட்புறம்)
யாழ்ப்பாணம்.

அன்பளிப்புப் பொருட்கள்
அழகு சாதனப் பொருட்கள்,
பாடசாலை (B) மாக் வகைகள்,
பிரயாண (B) மாக் வகைகள்

(இ /755)

நல்லூரில் வீற்றிருந்து நமையாளும் கந்தனே, சுந்தரத் தேரேறி வருக - சுகமெல்லாம் தருக

சகலவிதமான ஜவுளித் தினுசுகளையும்
மலிவு விலையில் பெற்றுக்கொள்ள

# ரவி அன் ராஜ் சில்க்ஸ்

77, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இலக்கம் : 2469.

(இ-748)

### சிட்னி ஒலிம்பிக்கில்

# கலந்து கொள்ளும் விளையாட்டு வீரர்கள் மீது கடும் சோதனை

## அணு ஆலைகளை தகர்க்கவும் முயற்சி

(கன்பரா)

அவுஸ்திரேலியாவில் அடுத்த மாதம் 15 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்ளவென வரும் வெளிநாட்டு விளையாட்டு வீரர்கள் கடும் சோதனைகளுக்கு உள்ளாக்கப்படுவர் என அந்நாட்டரசாங்கம் அறிவித்துள்ளது.

சிட்னி நகரில் நடத்துவதற்கும் திட்டமிட்டுள்ள ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்வதற்கு வரவுள்ள விளையாட்டு வீரர்களைப் பரிசோதிப்பதற்கென சிட்னி விமானநிலையத்தில் பல்வேறு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சிட்னி விமான நிலையத்தில் வீரர்களைப் பரிசோதிப்பதற்காக 800 சுங்க இலாகா அதிகாரிகள் புதிதாக நியமிக்கப்படவுள்ளனர்.

தற்காலிக உடல் பலத்தை ஏற்படுத்தவல்ல வில்லைகள் மற்றும் போதை மருந்துகளை மறைத்துவருவோரைக் கண்காணிப்பதற்காகவே மேற்படி பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவுஸ்திரேலிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இருந்த போதிலும் விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெறும் வேளையில் அரங்குகளுக்கு அருகே உள்ள அணு உலைகளைத் தகர்த்து பெரும் உயிராபத்துகளை விளைவிக்க தீவிரவாதக் கும்பல் ஒன்று திட்டமிட்டு வருவதாக நியூசிலாந்து நாடு அவுஸ்திரேலியாவை எச்சரித்துள்ளது.

இதனைத் தடுக்கும் வகையிலேயே மேற்படி பரிசோதனை ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் எனவும் விளையாட்டு வீரரை அவமானப்படுத்தும் செயலாக இது அமையலாம்எனமற்றையோர் எண்ணக்கூடும் எனக் கருதியே வேறு காரணங்களை அரசு கூறிவருவதாகவும் அரசியல் நோக்கர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (உ)

# இனவாதநட வடிக்கைகளைஎதிர்த்து அமெரிக்காவில் ஆர்ப்பாட்டம்

(வாஷிங்டன்)

அமெரிக்காவில் நிகழும் இனவாத நடவடிக்கைகள் மற்றும் பொலிஸாரினால் பொதுமக்கள்மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் கொடூர நடவடிக்கைகள் என்பவற்றைஎதிர்த்து வாஷிங்டனில் பெரும் ஆர்ப்பாட்டம்ஒன்று நிகழ்த்தப்பட்டுள்ளது.

'எனக்கொரு கனவுண்டு' எனும் தலைப்பில் அமெரிக்க அறிஞர் 'மாட்டின் லூதர் கிங்' 1963 ஆம் ஆண்டு ஆற்றிய வரலாற்றுப்புகழ்மிக்க உரையின்நினைவு நாளை முன்னிட்டே மேற்படி ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது.

இவ் ஆர்ப்பாட்டத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாதிக்கப்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டு தமது எதிர்ப்பினை தெரிவித்துள்ளனர். (உ)

## உலக தரிசனம்

# பாகிஸ்தானிலுள்ள இந்திய அதிகாரி நாடு கடத்தப்பட்டார்

(இஸ்லாமாபத்)

பாகிஸ்தானிலுள்ள இந்திய தூதரக அதிகாரிஒருவர் நாடுகடத்தப்பட்டார்.

பாகிஸ்தானில் உளவு வேலைகளில் ஈடுபட்டார் என்ற சந்தேகத்தின் பேரில் நேற்றுமுன்தினம் இந்தியாவிற்கு திருப்பி அனுப்பப்பட்டார்.

இந்நாடு கடத்தலுக்கு இந்தியா இரண்டுவாரத்துக்கு முன் உளவுபார்த்தார் என்ற சந்தேகத்தில் பாகிஸ்தான் தூதுவரை நாடுகடத்தியதற்கு எதிரொலியாக இது நடந்திருக்கலாமென்று நோக்கர்கள் கருதுகிறார்கள். (உ)

# 10000 சிறைக்கைதிகள்விடுதலையாவர்

## சுதந்திர தினத்தையொட்டியாம்

(லண்டன்)

வியட்னாமின் 55வது சுதந்திரதினத்தை முன்னிட்டு, 10 ஆயிரம் சிறைக்கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளனர்.

பல்வேறு குற்றச்சாட்டுகளின் பேரில் நீண்ட காலமாக வியட்நாம் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டவர்களே இவ்வாறு விடுதலை செய்யப்படவுள்ளனர்.

மேற்படி 10 ஆயிரம் கைதிகளினதும் பெயர்பட்டியல்கள், ஜனாதிபதியின் அங்கீகாரத்தைப் பெறும் வகையில் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக தெரியவந்துள்ளது.

இதேசமயம், கடந்த ஏப்ரல் மாதம் இடம்பெற்ற, வியட்நாம் போர் முடிவின் 25 ஆம் ஆண்டு நினைவையொட்டி 29 வெளிநாட்டவர் உள்ளிட்ட 12 ஆயிரத்து 264 சிறைக்கைதிகள் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ)

# அமெரிக்கா செல்லும்இந்தியப்பிரதமர் பாராளுமன்றிலும் உரையாற்றுவார்

அமெரிக்காவிற்கும்இந்தியாவிற்கும் கருத்து வேறுபாடுகள் சில இருந்த போதும் இரண்டு நாடுகளும் நெருக்கமான உறவுக்கு வந்துவிட்டன என்று அமெரிக்காவுக்கான இந்தியத் தூதுவர் நரேசந்திரா தெரிவித்துள்ளார்.

ஏ.என். ஐ தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் தொடர்கையில் அணு ஆயுத விடயத்திலும் ஏவுகணை விடயத்திலும் இந்தியாவின் நிலைப்பாட்டினை அமெரிக்கா நன்குபுரிந்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

இந்தியப் பிரதமர் வாஜ்பாய் அடுத்த மாதம் அமெரிக்கா செல்ல விருப்பதாகவும் அங்கு தொழில் நுட்பம் வாணிபம் தொழில்துறை எரிசக்தி அறிவியல் தொழில் நுட்பம், தொலைத் தொடர்பு தொழில் நுட்பம் ஆகியவற்றில் இருதரப்பு ஒத்துழைப்புப் பற்றியும்பேச்சுவார்த்தைகள் இடம் பெறும்.

இப்பேச்சுக்கள் அமெரிக்க அதிபர் இந்தியா வந்திருந்த பொழுது செய்து கொள்ளப்பட்ட உடன் படிக்கையின் அடிப்படையில் நடைபெற இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்கா செல்லும் வாஜ்பாய் ஐ. நா. சபை புத்தாயிரமாம் ஆண்டின் கூட்டத்தில் உரை நிகழ்த்துவார். இதே வேளை அமெரிக்க பாராளுமன்றத்திலும் உரை நிகழ்த்தவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (அ)

### நூறு வீதம் எழுத்தறிவுள்ள

# மாநிலங்களின் வரிசையில் கேரளாவிற்கும் முக்கிய இடம்

(புதுடில்லி)

கேரள மாநிலத்துக்கு ஐ. நா சபையின் புனெல் கோவின் அறிவொளி விருது கிடைத்திருக்கிறது.

இந்தியாவில் 100 வீதம் எழுத்தறிவுள்ளோர் வசிக்கும் மாநிலங்கள் வரிசையில் கேரளம் 1991 ஆம் ஆண்டு இடம் பெற்றிருந்தது.

புனெஸ் கோவின் இந்த விருது கிடைப்பதன் மூலமாக கேரள மாநிலம் எழுத்தறிவில் 100 வீதம் என்பதை அங்கீகரித்துள்ளது.

மாநிலத்துக்கான இந்த விருதினை உலக அறிவொளி தினமான செப்டெம்பர் 8 இல் மனித வளத்துறை அமைச்சர் முரளிமனோகர் ஜோஷி வழங்குவார். (அ)

# இரத்தத்தை உடலுக்குள்செலுத்த மின்சார கருவி கண்டுபிடிப்பு

## பிரிட்டன் நிபுணர்கள் சாதனை

(லண்டன்)

மருத்துவ வரலாற்றிலேயே முதல்தடவையாக, இரத்தத்தை உடலுச்குள் செலுத்தக்கூடிய மின்சாரக்கருவி, ஒருவரின் உடலுக்குள் பொருத்தப்பட்டுள்ளது.

இந்த அரிய சாதனையை, மூலம் பிரிட்டன் மருத்துவ விஞ்ஞானிகள் நிரூபித்துக் காட்டியுள்ளனர்.

இருதயநோயினால் பாதிக்கப்பட்ட நோயாளிக்கு பெருவிரல்அளவுள்ள மின்சாரக் கருவி இருதயத்தினுள்ளே பொருத்தப்பட்டுள்ளது.

இரத்தத்தை உடலுக்குள் செலுத்த உதவுவதே இம் முயற்சியின் நோக்கமாகும்.

இது வெற்றியளித்திருப்பதானது, இருதயநோயால் பாதிக்கப்பட்டபலருக்கு நிரந்தர சுகமளிக்கும் என பிரிட்டன் மருத்துவ விஞ்ஞானிகள்

### ஐ. தே. கட்சியின்

# வேட்பாளர் பட்டியல் இன்னும் பூர்த்தியில்லை

(கொழும்பு)

பலை தெரிவு செய்யும் பணி

பொருத்தப்பட்டுள்ளது.
இந்த அரிய சாதனையை, இருதடநோயாளி ஒருவரின் இருதயத்தினுள்ளே பொருத்தப்பட்டுள்ளது.
பிராணவாயு ஏற்றப்பெற்ற ...
... தர சுகமளிக்கும் என பிரிட்டன் மருத்துவ விஞ்ஞானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்

# நஞ்சு கலந்த மதுபானம் அருந்திய 16 ஆயிரம் பேர் பலியாகினர்

## ரஷ்யாவில் அதிர்ச்சி தரும் தகவல்

(மொஸ்கோ)

ரஷ்யாவில் இவ்வருட முதல் 5 மாதங்களில் நடாத்தப்பட்ட கணிப்பீடுகளின்,படி 15 ஆயிரத்து 823 பேர் நஞ்சு கலந்த மதுபானத்தினை அருந்தியதால் மரணமடைந்திருப்பது தெரியவந்துள்ளது.

கடந்த எந்தவொரு காலத்திலும் இவ்வாறு குறுகிய காலப்பகுதியில் பெருந்தொகையானோர் நஞ்சுகலந்த மதுவினை அருந்தியதால் மரணமடைந்ததாக தகவல் இல்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது.

மதுபானங்களின் விலைஅதிகரிப்பால் சட்டவிரோத மது உற்பத்தி நிலையங்களை மதுப்பிரியர் நாடுவதே இதற்குக் காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வர்த்தகர் தமது சுயஇலாப நோக்கத்திற்காக மதுவிற்குள் நஞ்சு கலப்பது குறித்து ரஷ்யாவில் செயற்படும் சமூக நல அமைப்புகள் பலவும் கவலை வெளியிட்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(க)

## அமிர்தா பச்சன் நடிகருக்கு கொலை மிரட்டல்

(மும்பை)

பிரபல ஹிந்தி திரைப்பட நடிகர் அமிர்தா பச்சனுக்கு பாதுகாப்பு அளிக்கும் படி மத்திய உள்துறை அமைச்சகம் மகாராஷ்ரா அரசுக்கு அறிவித்துள்ளது.

நடிகர் அமிர்தா பச்சனுக்கு அநாமதேய ரெலிபோன் அழைப்புகள் வந்ததாகவும் அதிலே சில அழைப்புகள் பணம்பறிக்கும் நோக்குடையதென்றும் சில அழைப்புகள் கொலை மிரட்டல்கள் என்றும் தெரியவருகிறது. (து)

## ஆறுமுகனார் தேரதில் அருள் மழை பொழிகிறார்

ஆடி வருமழகில் அன்பர்கள் திளைக்கிறார்
ஆறுமுகனார் தேரதில் அருள் மழை பொழிகிறார்
கூறு தமிழ்ப் பாவொலி நல்லையில் ஒலிக்குது
குன்றதில் ஆளும் குமரன் நல்லையில் வருகிறான்;

வேலணை பாலா.

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி தனது வேட்பாளர் பட்டியலை இன்னமும் பூர்த்தி செய்யவில்லை என தெரியவந்துள்ளது.

இத்தவாரத்திற்குள் இவ் வேலைகள் முடிவடைந்துவிடும் என கட்சியின் பொதுச் செயலாளர் அறிவித்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் வேட்பாளர் பட்டியலை தெரிவு செய்யும் பணிகள் முடிவுறும் தறுவாயில் இருப்பதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் டி. ஜெயரட்ண அறிவித்துள்ளார்.

இதேவேளை இன்றில் இருந்து அடுத்தமாதம் 4 ஆம் திகதி வரை வேட்பு மனுக்களை தாக்கல் செய்யும் தினமாக அறிவிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# வன்னிக்கும் பொருட்கள் அனுப்பிவைப்பாம் ஊடகத்தகவல் நிலையம் தெரிவிப்பு

(கொழும்பு)

வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு 20 லொறிகளில் பொருட்கள் அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாக விசேட ஊடகத் தகவல் மையம் அறிவித்துள்ளது;

முல்லைத்தீவுக்கு 6 லொறிகளிலும் கிளிநொச்சிக்கு 11 லொறிகளிலும் மன்னாருக்கு 3 லொறிகளிலும் உணவு மற்றும் பசளை விவசாயத்துக்கு தேவையான பொருட்கள் என்பன அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாக தெரியவந்துள்ளது.

இதேசமயம் முல்லைத்தீவு கிளிநொச்சி பகுதிகளில் இருந்து நேற்றுமுன்தினம் 11 நோயாளர்கள் வவுனியா வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் மூலம் அழைத்துச்செல்லப்பட்டிருப்பதாகவும் விசேட ஊடகத்தகவல் மையம் மேலும் அறிவித்துள்ளது.(உ)

## வயிற்றோட்ட நோய் பரவல்

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதியிலுள்ள வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் வயிற்றோட்ட நோய் பரவல் அதிகமாக உள்ளதாகமாவட்ட உதவி வைத்திய அதிகாரி "வேலோககுரு" தெரிவித்துள்ளார். [த-48]

கோளில் பொறியில் குண
மிலவே எண் குணத்தான்
தாளை வணங்காத்தலை

-குறள்

# வலம்புரி

## உதித்தனன் உலகர் உய்க

அறு முகச் செவ்வேள் குஞ்சரியொடும் குறமகளொடும் இன்று தேர் பவனிவருகிறார். பன்னிரு கரமும் பவளச் செவ்வாயும் அஞ்சும் முகத்தர்க்கு ஆறு முகத்தொடும் வருகின்ற காட்சி மானிடப் பிறப்பின் மாட்சியின் உச்சம் தான். காணக் கண் ஆயிரம் வேண்டும் வேலவனின் திருக்கோலம் காண்பதற்கு.

நகை காட்டி நங்கையர் முருகன் நயனப் பார்வை வேண்டி நிற்பது ஒருதலை. விழி நீர் அருவி வழியும் பக்த கோடிகள் ஒருபுறம். நல்லோர் பாதம் பட்ட மண்ணிலே, நல்லூரிலே தம் மேனி தீண்டி அருள் பெற்று முருகன் உலாவரும் அழகுரதத்திற்கு அணி செய்து முன்னும்பின்னும் உருண்டு வரும் கோலம் உள்ளத்தை வெதுப்பும், உணர்வை தூண்டி உள்ளொளி பெருக்கும்.

பஜனைக் கோஷ்டிகள் பல நாமம் சொல்லி உள முருகப்பாடும் கோலம் பக்த வெள்ளத்தை ஈர்க்கும். தமிழ் கடவுளர்க்கு வானவர் பூமழை பொழிவதும், தமிழர்கள் இதய தாமரைகளை பாதார விந்தத்தில் வைத்து பணிவதும் இயல்பு. இவற்றிற்கு மேலாக கிலிதரும் ஹெலியும் வட்டமிட்டு வண்ண மலர் சொரிவது ஆணவ மடக்கும் குரு நாதனின் உயர்வு தான்.

பல்லே ரும் ஏத்தப் பணிந்து என்பது மெய்யடியார் உதடுகள் உதிர்க்கும் சொற்கள். இங்கும் எங்கும் இலங்குவேல் முருகனை இதயமார ஏத்திப் பணிவது அவன் அருள் வெள்ளத்தில் மிதப்பதற்கே.

தேனூறு கிளவிக்கு வாயூறி நிற்றவன் ஞான சக்தியாய், இச்சையும், கிரியையும் எம்மிடர் தீர்க்கக் கொள்ள வேண்மென்று கூப்பிய கரத்தராய், குளறும் வாய்ச் சொல்லராய், கடலெனப்பெருகும் கண்ணீர் மல்கிட வெள்ளம் போல்வீதி வருகிறார்கள். வேறொன்றுக்குமல்லவீட்டில் இருக்க, நிம்மதி அடைய நாட்டிலே நாசம் செய்வோர் நலிந்திட வேண்டுமென்றே.

இரு செவியுடையானல்லன் இறையவர் சிறை மீட்ட தீரன். பன்னிரு செவிகளால் பாவிகள் பதறலும், பரிந்து வேண்டும் சொற்களும் கேட்க முடியாதிருக்க முடியாது கலியுகவரதன் கடாட்சித்தருள வேண்டும். சேவலும் மயிலுமாய் சூரன் அமைந்தவாறு தமிழர்கள் பகைவரும் பரம்பொருள் அடியிற் சரணடைய வேண்டும்.

அன்புடன் ஆசிரியர்

# நல்லூரான் திருவடிக்கு - 24

(இரதோற்சவம்)



## தேரேறி வாராயோ

தங்கத் தேரேறி வீதியுலா வருகின்ற
முத்தமிழின் காவலனே.
தமிழர்கள் படுகின்ற அவலத்தை நீக்கிடவே.
தேரேறி வாராயோ.
தந்தையோடு கோபங்கொண்டு மலையிலேறி
அமர்ந்தவனே.
பார்வதியின் இளையவனே.
பிரிந்து போன உறவெல்லாம் ஒன்றாகி வாழ்ந்திடவே.
தேரேறி வாராயோ.
கொடுஞ் சூரன் பகைவென்று அமைதிதனை தந்திட்ட
நல்லூரின் காவலனே.
போரொழிந்து மக்களெல்லாம் அமைதியாக
வாழ்ந்திடவே.
தேரேறி வாராயோ.

இ. அ. அமலரட்ணம்

## ரதமேறும் ஆறுமுகன்

வடம் பிடித்திடும் தமிழ் கைகள்-ஆறுமுகன்
வண்ண அழகில் தம்மை மறக்கின்றன
நிலம் நிறைந்திடும் மனிதர் கூட்டம்-ஆறுமுகன்
நிலா அழகில் தம்மை நிறைக்கின்றன.

— நல்லை அமிழ்தன் —

## தேர் முட்டி சுற்று

தேர் முட்டி சுற்றினால்
தேன் மொழியின் கீதம் கேட்கும்
யார் வந்து கத்தினாலும்
நல்லூர் மண்ணில் வேதம் பூக்கும்.

நாத மணி ஒலித்தால்
நாளும் கைகள் உயரும்
வேத மொழி ஒலித்தால்
வேலின் விழிகள் கதைக்கும்.

— பு. திலீப்காந் —

## திருவாய் மலர்ந்து வாரீர்

முருகா முருகா முருகா என்று
முறையிடு மன்பர் குறை தீர்க்க
வருவாய் தேரில் திருவாய் மலர்ந்து
வாரீர் முருகா நல்லூரில்

அளவையூர் கே. எஸ். சிவஞானராஜா

## துயர் துடைத்திடு முருகா!

தேரேறி வரும் வேலா-என்றும்
நான் உன் பக்தனென
இருந்திடக் காதலுடன்-என்றும்
ஏற்றுக் கொண்டு (ன்)
குன்றிடா அன்பைத் தந்திடு-உன்
திருவடி சரணம் கந்தா!

கண் விழிகள் உன்னெழிலைக்
கண்டிடும் போதினிலே-மகிழ்ந்திட
துன்புறும் மக்கள் துயர்
துடைத்திட யாழ் நகரில்
தேறேரி வலம் வரும் தமிளழகா!
தமிழ்ச் சங்க முத்தழகா!

-வரணியூர் சி. நந்தா-

## சொற்கேளாய் மடநெஞ்சே

நல்லைக் கோவிலிலே நாதனவன் இருக்கின்றான்
எல்லைக் காவலினை என்னாளும் புரிகின்றான்
சொல்லைக் கேளுமையா சோகத்தை உதறுமையா
தொல்லை நீங்குமையா சுகம்யாவும் சேருமையா

கற்பூரமணம் தன்னில் கதிர்வேலன் முகம்தோன்றும்
பொற்கோயிற் சிகரத்தில் குமரனவன் எழில்
தோன்றும்
சொற்கேழாய் மடநெஞ்சே உற்றதுணை முருகன்
தான்
சற்குருவைத்தினம் நாடு நாளும் திருப்புகழ்பாடு

சித்திர வரதன்

## தேரேறிவந்து எமக்கு தீர்வொன்றைத்தா!

வேல்ஏந்தி தேரேறிவருகின்ற சுந்தரனே நல்லூரா
வெற்றிகள் உன்னால்குவிய வேண்டும்-உந்தன்
தாளினைப் பணிந்தோம் தமிழர்பக்கத்தில் நில்வின்று
அடுமாறு உன் அன்பரைக் காப்பதற்கு
நாள்முழுதும் பல்குழல் ஒலியால் அஞ்சுகிறோம்
நம் ஊர் பிரிந்தே தெருக்களில் அலைகின்றோம்-எம்
வாழ்நாளில் வளமான நிலமதிலே சந்ததியும் வாழ
தேரேறிவந்து தீர்வொன்றை தரவேண்டும்
தமிழருக்கு

- மதுரகவி -

## தேரேறும் ஆறுமுகா!

சீரோங்கு நல்லையிலே கோயில் கொண்ட திரு
முருகா!
தேரேறிக் காட்சியது தரும் ஆறு முகத்தவனே!
தீராயோ எங்கள் துயர்? நாடும் அமைதிதனைத்
தாரோயோ தமிழ் தலைவா! தொழுகின்றோம்
உன்னடியே!

நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்

## தேரேறி அருள் புரிய வா வா முருகா!

அலங்காரத் தேரேறி வா வா முருகா
அன்பரவர் ஆடுகிறோம் பாடுகிறோம்
உன்னடியைப் போற்றியே!
உருக் குலைந்தே சோருகிறோம்
உன் தாளை வணங்கியே!
அடியவரின் குறைகள் தீர்த்து
அருள் தனை வழங்கவே!
எங்கள் நல்லூர்க் கந்தா தேரேறி வா வா.

இ. தாசன்

## வேலினைத் தொழுது உய்வோம் நாம்

தேவர் மூவர் யாவர்கட்கும் காவலனாய்வந்துதித்த
பாவலன் கரம்பிடித்தவேல்
பாவவினை தீர்ப்பதற்கு மார்பினில் உருத்திராட்சமணி
பேருடையோன் கைப்பிடித்தவேல்
சூரரைக் கருவறுத்து தேவர் சிறை மீட்டிநின்ற
காரணன் கரம்பிடித்த வேல்
தேரினில் இவரும் நல்ல ஆறுமுகன் கரத்திலுள்ள
வேலினைத் தொழுது உய்வோம் நாம்.

கந்தமுருகேசதாசன்

## நீதி சாகுமா?

தேரேறித் துயரறுத்த தேவர் தலைவா - இப்
போராடும் பூமிகாக்கப் பொறுமை ஏனப்பா?
நீராடும் விழி நோக்க நேரம் இல்லையா? இனி
நீயாடும் நல்லையிலும் நீதி சாகுமா?

சக்தி

## (இ) ரதமேறி நீ வா

ஊருராய் இடம்பெயர்ந்து வாழ்ந்த போதிலும்
உன்ஊராம் நல்லூரை மறந்ததில்லைநாம்
தேரேறி நீ அருளும் திருவீதிவலம் - காண
தேடிவந்தோம் உன் வாசல் நல்லைநாதனே!

- குறிஞ்சி

## வேற்கரத்தோன் அஞ்சாதீர் என்றே வண்ணத் தேரினில் வருகின்றான்

ஊரெல்லாம் திரண்டு உன் வாசலிலே
உள்ளமெல்லாம் சொல்லி உருகி அழுதிட,
வேற்கரத்தோனே; ஆறுமுகமாகி அம்மையரோடு,
அஞ்சாதீர் என்றே ஆனந்தக் காட்சி தந்து,
வண்ணத் தேரினில் வீதி வலம் வருகின்றாய்
பகையும் பஞ்சமும் போக்கியே வர வேண்டும்
நல்லைப் பெருமானே போற்றி போற்றி.

- மீசாலையூர் கமலா

## உத்தமத்து வழிசமைப்பாய்

பன்னிருகண், கைகளொடும்;
பக்கமிரு சக்தியொடும்;
பார்த்திருக்கும் நல்லை நகர்ப்
பதியுறையுஞ் சரவணனே!
என்னிரு கண் கொள்ளாத
எழிற் கோல நாயகனாய்;
எழுந்தருளித் தேர்மீது
எலலையெலாம் ஊர்பவனே!
பொன்னிருக்கும் உன்னிதயப்
பொலிவையெமக் களிக்காயோ?
பொய்கை பொழில் தரும் நீர்மை
பொழுதெல்லாம் தெளிக்காயோ?
உன்னொருகண் பார்வைக்காய்
ஊரெல்லாம் இங்குற்றோம்.
உத்தமமாய் ஓர் சூழல்
உவகையுறத் தாராயோ?

முருகேசு சிவஞானம்;

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நூலகத்துறைப் படிப்பகம்



வடக்கு கிழக்கில் தமக்கு

# வாக்களிக்குமாறு புதிய இடதுசாரி முன்னணி கோருவது மனித உரிமை மீறும் செயலே

## ஈ. பி. டி. பி. அமைப்பு தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வடக்கு - கிழக்கிலுள்ள தமிழ்பேசும் மக்கள் தமக்கு வாக்களிக்க வேண்டுமென புதிய இடதுசாரி முன்னணி வேண்டுகோள் விடுத்திருப்பது வடக்கு - கிழக்கு வாழ் தமிழ்பேசும் மக்களின் உரிமைகளை மீறும் செயலாகுமென ஈழமக்கள் ஜனநாயக கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அக்கட்சி மேலும் தெரிவிக்கையில் வடக்கு கிழக்கில், யுத்தம் இன்று அல்லது நேற்று உருவாகியது அல்ல இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்தே தமிழ் மக்கள் மீது இன்றைய யுத்தம் நீடிப்பதற்குரிய கருத்து வேறுபாடுகளை சிங்களப்பேரினவாதிகளை உருவாக்கியிருந்தார்கள். இவர்கள் மத்தியில் வாழ்ந்து. சோசலிஸ சித்தாந்தத்தைக் கடைப்பிடித்து வரும் புதிய இடதுசாரி முன்னணியினர் இன்று வரை தமிழ்மக்களது அரசியல் பிரச்சினைக்குத் தீர்வுகாண எதுவும் செய்யவில்லை. மறுதலையாக எமது மக்களது பெரிய பிரச்சினைகளை வைத்து அரசியல் பிழைப்பு நடத்தியவர்களே தான் இந்தப் புதிய இடதுசாரி முன்னணியினர்.

தமிழ்மக்களது பிரச்சினைக்கு நிரந்தரமான நீதியான அரசியல் தீர்வைபெற்றுக்கொடுக்கவே ஈ.பி.டி.பியினராகிய நாம் ஜனநாயக வழியில் போராடி வருகின்றோம். அதற்காக பாராளுமன்ற பிரதிநிதித்துவ அதிகாரத்தைப் பயன்படுத்தி அரசின் மீது அழுத்தங்களை பிரயோகித்தும் சர்வதேச சமூகத்திடம் வேண்டுகோள்களை விடுத்தும் எமது பிரச்சினைக்கு அரசியல் தீர்வு எட்ட, எமது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம்.

எமது மக்களுக்கு எந்தத் தீர்வையும் தரப்போவதில்லை. மறுதலையாக அவர்களது பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்கி, அவர்களை ஒரு அவலத்துக்குள் தள்ளிவிட்டுள்ளது. இன்று குடாநாட்டிலுள்ள மக்களது பெரும்பாலன அன்றாடன்வலங்களுக்கு ஈ. பி டி. பி யினராகிய நாமே தீர்வு கண்டு வருகின்றோம். இதனை எமக்குக் கிடைத்த பாராளுமன்ற பிரதிநிதித்துவ அதிகாரத்தைப் பயன்படுத்தியே செய்ய முடிந்தது. வடக்கு-கிழக்கில் உள்ள மக்கள் தேர்தலைப் புறக்கணித்து அதற்குரிய பாராளுமன்ற ஆசனங்களை வெற்றிடமாக்குவார்களாயின் நாம் அதற்குரிய அதிகாரத்தைக்கொண்டு எமது மக்களுடைய அரசியல் போராட்டத்தை முன்னெடுப்பது? எமது மக்களுடைய அன்றாட அவலங்களை எத்தகைய அதிகாரத்தைப்பயன்படுத்தி தீர்வுகாண்பது? இவ் நிலமைகளை கருத்திற்கொண்டு எமது மக்கள் தங்கள் பாராளுமன்றப் பிரதிநிதிகளை தெரிவுசெய்வதற்கு தவறாமல் தங்கள் வாக்குகளைப் பயன்படுத்த வேண்டும். இல்லாவிடில் ஒவ்வொருவரும் எமது மக்கள் சமுகத்திற்கு புரிந்த அரசியல் தற்கொலையாகவே இருக்கும்.

1989ம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது மக்கள் தெரிவுசெய்த பிரதிநிதிகள் தொடர்ந்து வந்த அரசியல் சூழ்நிலமையினால் தங்கள் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை இராஜினாமா செய்தார்கள். இறுதியில் என்ன நடந்தது? பாராளு இராஜினாமா மூலம் தமிழ் மக்களுக்கு எதுவும் பெரிதாக வரலாற்றில் அடைந்ததில்லை

ஆனால் இப்பிரதிநிதித்துவத்தைப் பயன்படுத்தி எமது மக்களுக்கு பெறக்கூடிய அரசியல், அன்றாட வேலைகளையும் குறைந்த பட்சம் அபிவிருத்திப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீட்டையும கூட நாம் இழந்திருந்தோம். இந் நிலையில் 1994ம் ஆண்டு பொதுத்தேர்தல் வரையில் வெற்றிடமாக விடப்பட்டிருந்த பாராளுமன்ற பிரதிநிதித்துவத்திற்குநாம்போட்டியிட்டு தமிழ் மக்களின் அரசியல் அரங்கத்தில் ஏற்பட்டிருந்த வெற்றிடத்தை நிரப்ப முற்பட்டிருந்தோம்.

இந்தப் பொதுத் தேர்தலிலும் கூடபெரும்பாலன எமது மக்களுக்கு தமது பிரதிநிதிகளை தெரிவு செய்கின்ற வாய்ப்பும் வசதியும் மறுக்கப்பட்டிருந்தது. ஆனால இந்த தசதிவாமப்பு ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் கூட இந்தப் பாராளுமன்ற பிரதிநிதித்துவ அதிகாரத்தைத் பயன்படுத்தி பல அன்றாட அலுவல்களைச்செய்துமுடிக்கக் கூடியதாகஇருக்கின்றது என்பது இன்றுவெளிப்படையாகதெரியவந்துள்ளது.

எமதுமக்களுடைய அரசியல் பிரச்சினைகளையும், அன்றாட அவலங்களையும் சரிவர புரிந்து கொள்ளாத புதிய இடதுசாரி முன்னணி. கடந்த பாராளுமன்றக் காலப்பகுதியில் பெரும்பாலான காலங்களைஆளும்பொதுஜனஐக்கிய முன்னணியுடன் சேர்ந்தே கழித்துவந்தது. இன்றுஐக்கிய முன்னணியில்இருந்துஅரசியல் கூட்டை உடைத்துக்கொண்டு வெளியே நிற்கும் புதியஇடதுசாரிமுன்னணி வடக்குக் கிழக்கில் போட்டியிட முடியாத சூழலில் எட்டாப்பழம் புளிக்கும் எனும் நிலைப்பாட்டில் தமிழ் மக்களிடம் இத்தகைய வேண்டுகோளை முன்வைத்துள்ளது. இதனையிட்டு எமது மக்கள் தமது வாக்குகளை அளிப்பது தொடர்பாக எந்த வித குழப்பமும் அடைய வேண்டாமென ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி(ஈ.பி.டி.பி) கேட்டுக் கொள்கின்றது. (க)

### புலிகள்...

இம்மாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

பயங்கரவாதம் என்றால் என்ன என்பது தொடர்பாக கனடா தெளிவான வரையறைகளை கொண்டுள்ளது. இதன் அடிப்படையில்தமிழீழ விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள் அல்ல என அவர் தெரிவித்தார்.

உலக நாடுகளில் அமைதி நிலவுவதையும் மனித உரிமைகள் பேணப்படுவதையும் உறுதி செய்யப்பட வேண்டிய கடமைப்பாடு சர்வதேசத்திற்குண்டு இதன் அடிப்படையில் சர்வதேச சமூகத்திற்கு இலங்கை தொடர்பன அபிப்பிராயம் உள்ளது.

ஆனையிறவு படைத்தளத்தின் வீழ்ச்சியைத் தொடர்ந்து யாழ். குடாநாட்டில் போர் தீவிரமடைந்தது.உலக நாடுகள் பல. இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் எனவும், அந்தத் தீர்வு சிறுபான்மை மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யக் கூடிய தீர்வை அமைக்க வேண்டுமெனவும் விரும்பினார்.

இலங்கை அரசாங்கம் கேட்டுக்கொண்டதற்கிணங்க இலங்கையின் பிராந்திய ஒருமைப்பாட்டிற்கு பங்கம் ஏற்படாதவாறு நோர்வே அரசாங்கம் இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் பேச்சுவார்த்தையை ஆரம்பித்துள்ளதுஎன்றும் பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்தார், (வ-07)

### வடமராட்சியில்...

குடியிருப்பு வசதி ஏற்படுத்தி கொடுத்த பின் அக்காணியில் 30 லட்சம் ரூபா செலவில் களஞ்சியம் அமைக்கப்படவுள்ளதாக யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (வ)

### 22மாவட்டச்...

தமதுகட்டுப்பணத்தை செலுத்த உள்ளன.

பிரதான அரசியல் கட்சிகளான பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஐக்கிய தேசியக் கட்சியும் தத்தம் வேட்பாளர்களைஇன்னமும்தெரிவுசெய்யவில்லை எனச் சம்பந்தப்பட்ட

கஜன்
திரை
ஊர்காவற்றுறை

ராஜா
யாழ்ப்பாணம்

## தவறுக்கு மனம் வருந்துகின்றோம்

நேற்றைய வலம்புரி நாளிதழில் எமது கட்சியினால் பிரசுரிக்கப்பட்ட பாராளுமன்ற பொதுத் தேர்தல் விளம்பரத்தில தவறு நிகழ்ந்துள்ளது அறிகரித்துவிட்டவேலைப்பளுவின் காரணமாக ஏற்பட்டகவனக்குறைவினால் நிகழ்ந்துவிட்ட இத்தவறிற்கு ஈ.பி.டி பி தன்மனவருத்தத்தை தெரிவித்துக்கொள்

## நல்லை ஆதீன நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

நல்லை ஆதினத்தில் தேர் திருவிழாவை முன்னிட்டு இடம் பெறும் நிகழ்வுகள் வருமாறு

திருமுறை ஓதல் அ. அமுர்த போஜன் பண்ணிசைக் கச்சேரி வில்லூன்றி சகோதரர்கள் செல்வன்கு. பிரணவன் கு. குருபரன் கு. நிருத்தன் ஆகியோர்.

இன்னிசைக் கச்சேரி சங்கீத பூஷனம் வி. சிவஞானசேகரம் இசைக்கலைமணி ஞானசொரூபன் சங்கீத பூஷனம் எஸ். குருசாமி கதாப்பிரசங்கம் எஸ் சிவசண்முகமூர்த்தி.(க)

## தடுத்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட இளம் பெண் ஒருவர் யாழ் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

சுதுமலை வடக்கு மானிப்பாயைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் தயாளினி (வயது 20) என்பவர் கடந்த மே மாதம் கைது செய்யப்பட்டு காங்கேசன் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

ஊர்காவற்றுறை நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் தற்போது அவர் யாழ். சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (ந12)

## ஆஸ்பத்திரியில் அனுமதி

கருங்குளவி கொட்டிய நிலையில் மந்துவில்மேற்கைச் சேர்ந்த இருவர் சிகிச்சைக்காக மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

இப்பகுதியைச் சேர்ந்த ந. ரவி இ. ஞானசேகரம் ஆகிய இருவருமே கருங்குளவிச் கடிக்கு ஆளாகியவர் ஆவர். (த-89)

## கொக்குவில் இந்துவில் நூலகவகுப்பு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரியின் முறைசாராக் கல்விப் பிரிவினால் நடாத்தப்படும் நூலக உதவியாளர் பயிற்சி வகுப்பு மீண்டும் இன்று திங்கட்கிழமை பி.ப 3.30 மணிக்கு ஆரம்பமாக உள்ளது பயிற்சிக்காகத்தெரிவானவர்களும் இப்பயிற்சி வகுப்பில் புதிதாகச்சேர்ந்து கொள்ள விரும்புபவர்களும் அன்றைய தினம் கல்லூரிக்கு சமுகம் தருமாறு கல்லூரி அதிபர் பொ. கமலநாதன் கேட்டுள்ளார். (க)

கஜனி

திரை

ஊர்காவற்றுறை

கார்த்திக், ரேவதி ஜனகராஜ், குஷ்பு நடிப்பில்

## கிழக்கு வாசல்

காட்சி நேரம்
பி.ப 6:30 மணி
(இ652)

பிரதான அரசியல் கட்சிகளான பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஐக்கிய தேசியக் கட்சியும் தத்தம் வேட்பாளர்களை இன்னமும் தெரிவுசெய்யவில்லை எனச் சம்பந்தப்பட்ட கட்சி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ள அரசியல் கட்சிகள் யாவும் தமது வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வதற்குரிய கடைசி நேரம் வரை காத்திருப்பதால் பெரும்பாலான கட்சிகள் அடுத்த வாரமுற்பகுதியில் தமது வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யவுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது. (வ)

## ராஜா

யாழ்ப்பாணம்

நவரசநாயகன் கார்த்திக் கௌசல்யா அப்பாஸ் ராதாரவி நடித்த

## பூவேலி

10:30, 2:00 [பு/நே]
(இ/737)

துள்ளது அதிகரித்துவிட்டவேலைப்பளுவின் காரணமாக ஏற்பட்ட கவனக்குறைவினால் நிகழ்ந்துவிட்ட இத்தவறிற்கு ஈ.பி.டி.பி தன்மனவருத்தத்தை தெரிவித்துக்கொள்கின்றது

நேற்றைய தவறான சொற்பதத்தைக் கொண்ட விளம்பரத்தை அடிப்படையாக வைத்து ஈ.பி.டி.பி. இதுவரைகாலமும் கடைப்பிடித்து வந்த அரசியல் நிலைப்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்திவிட்டதாக எவரும் தப்பிப்பிராயம் கொள்ள வேண்டாமெனவும் ஈ.பி.டி.பி கேட்டுக்கொள்கின்றது.

வகுப்பில் புதிதாகச்சேர்ந்து கொள்ள விரும்புபவர்களும் அன்றைய தினம் கல்லூரிக்கு சமுகம் தருமாறு கல்லூரி அதிபர் பொ. கமலநாதன் கேட்டுள்ளார். (க)


### வேட்பாளர்கள்...

தார்த்தன், கதிர்வேற்பிள்ளை சுதாகரன் (ஈரோஸ்) அன்ரன் பொன்னையா (சாவகச்சேரி நகரசபைத் தலைவர்), செ. இருதயராஜா (வோல்டர்) பெனடிற் தனபாலசிங்கம், விக்டர் கெனடி ஆகியோரின் பெயர்கள் முதலாவது பட்டியலில் இடம்பெற்றுள்ளது.
(வ-43)


செம்மணியை எம்மால்
அம்பலப்படுத்தினார் அம்மணி!
அவ்வழியே, அவலங்கள் போக்கிட
ஆதரிப்பீர்,

## ஈழமக்கள் ஜனநாயக கட்சியை!
## ( ஈ. பி. டி. பி )

வீணையே உங்கள்சின்னம்! சேவையே எங்கள்எண்ணம்!!




1999ம் ஆண்டு யாழ். மாவட்ட அபிவிருத்திக்கென
(இ/736) ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர்களது நிதியில் இருந்து 220 லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.


இப்பத்திரிகை "வலம்புரி" [illegible] இல: 15, [illegible] யாழ்ப்பாணம் [illegible]
[illegible] 2000 [illegible] 18 [illegible]